24.10.2024 ம.சா1 கவிதா Mcop 381/2021

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் படிக்கவில்லை. விபத்து சமயம் நான் தென்காசியில் இருந்து சங்கரன்கோவிலுக்கு இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன் . எனது உறவினர் வாகனத்தில் சென்றேன். வாகன எண் ஞாபகமில்லை. டி.என்.22ஏ.எஸ்.6816 என்ற வாகனத்தில் நான் பயணம் செய்தேன் 3ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிருரை விபரத்தை மறுக்கும் விதத்தில் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரரின் முழுமையான கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என் மீது மோதியதாக சொல்லப்படும் ஆட்டோவின் காப்பீடு எண்.09180031118பி08208682 என்றால் மனுவில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி காப்பீடு சான்று 25.09.2018 முதல் 24.09.2019 வரை வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையின்படி விபத்து 23.07.2020ம் தேதி நடைபெற்றது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மோட்டர் வாகன ஆய்வாளர் அறிக்கையின்படி விபத்து வாகனமான ஆட்டோவிற்கு விபத்து தேதியில் காப்பீடு சான்று நிலுவையில் இல்லை என்றாலும், பெர்மிட் நிலுவையில் இல்லை என்றும், 1வது எதிர்மனுதாருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என காட்டப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என் ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஒட்டி சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின்படி மேற்படி வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இல்லை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தின் உரிமையாளரை கட்சி சேர்க்காத காரணத்தினால் என் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. குற்ற வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் விபத்து தேதியான 23.7.2020ம் தேதி விபத்து வாகனம் 3ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படாத

காரணத்தினால் விபத்து காயங்களுக்கு நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை 2ம்எதிர்மனுதாரரை ஈட்டுறுதி செய்து 3ம்எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 3ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.